DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.55/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2

Defence

Court

| | |
|---|---|
| Name | : நந்தினி |
| Father/ Husband Name | : திருமலை |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1,2,3 மற்றும் 6வது எதிரிகள் ஆஜர். 4, 5 வது எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரிகளை தெரியும். கடந்த 14.08.2020ம் தேதி இரவு 08.00 மணியளவில் என் வீட்டிற்கு எதிர்தார்போல் எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள். புகார்தாரர் வீட்டில் வேலைபார்த்த ஆராயி என்பவருக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்துள்ளது. லெட்சுமி, மீனாள், ஜோபிகா, ஆகியோர்கள் அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து உன் வீட்டில் வேலைபார்த்தால் அடிக்க கூடாதா என சொல்ல தேவிடியா முண்ட என அசிங்கமாக பேசி புகார்தாரரின் முடியை கையை பிடித்து இழுத்து ரோட்டு வாசலில் வைத்து மீனாள் மற்றும் லெட்சுமி புகார்தாரரின் கையை பிடித்து இருந்தபோது பாகம்பிரியான் என்பவர் கிரிக்கெட் மட்டையால் புகார்தாரரை அடித்துள்ளார். கருப்பன் என்பவர்

பீர்பாட்டிலால் புகார்தாரரை முற்பட்ட போது எனது வீட்டுக்காரரான அ.சா.1 ஊடே நுழைந்து தடுத்தபோது பீர் பாட்டில் அவர் தோள்பட்டையில் பட்டு உடைந்துவிட்டது.

2. பின்னர் புகார்தாரர் கீழே விழுந்து மயங்கிவிட்டார். மருதுபாண்டி சடே சடேர் என புகார்தாரரை அடித்துவிட்டார். பாகம்பிரியான் என்பவர் புகார்தாரரின் சேலையை பிடித்து இழுத்து உருவி எதிர்தார்போல் கருவிலில் வீசிவிட்டார். பின்னர் என் கையில் தான் சாவு என்று எதிரி பாகம்பிரியான் சொன்னார். பின்னர் 108 வர சொல்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1க்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் இல்லை. எதிரி மீனாள் என் மீது, அ.சா.1 மீது மற்றும் என் கணவர் மீதும் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை விசாரணைக்காக போலீசார் மறுநாள் அழைத்தார்கள். என்னை போலீசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை.

2. நான் சொன்னது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், என் மீது உள்ள வழக்கிலிருந்து தப்பிப்பபதற்காக புகார்தாரரை வைத்து பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதாரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.